O.S.74-2018

## முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை

அ.வ.எண்.74/2018

பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி விசாலாட்சி என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. விசாலாட்சி | வயது | : | 70/24 |
| கணவர் பெயர் | : | பார்த்தசாரதி | தாலுகா | : | சென்னை |
| கிராமம் | : | சென்னை | தொழில் | : | வீட்டு குடித்தனம் |

நாள்-11.01.2024

பி.வா.சா.1

### 5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. எங்கள் குடும்பம் பாரம்பரியமான குடும்பம் என்றால் சரிதான்.

2. வழக்கு சொத்துக்கள் அனைத்தும் எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள்.

3. 4 முதல் 9 பிரதிவாதிகள் எனது மகள்கள். அவா்களுக்கு 1990க்கு பிறகுதான் திருமணம் நடந்தது.

4. எனது மாமனார் 1ம் பிரதிவாதி குழந்தைவேலன் செட்டியார் 2019ம் வருடம் இறந்தார் என்றால் சரிதான். அவா் இறந்தபோது அவருக்கு 96 வயது என்றால் சரிதான். அவரது முதுமையில் அவரை நான்தான் பராமரித்து வந்தேன்.

5. இந்த வழக்கில் 5ம் பிரதிவாதியை தவிர மற்ற பிரதிவாதிகள் அனைவருக்கும் ஒரே வழக்கறிஞர் என்றால் சரிதான்.

6. இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி தனியாக ஒரு எதிா்வழக்குரை தாக்கல் செய்துள்ளாா் என்றால் சரிதான். அவா் தாக்கல் செய்த எதிா் வழக்குரையை நான் ஏற்றுக்கொண்டேன். நான் தனியாக எதிா் வழக்குரை தாக்கல் செய்யவில்லை.2019ம் வருடம் தான் அவா் எதிா் வழக்குரையை தாக்கல் செய்தாா். அந்த எதிா் வழக்குரையை தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞருக்கு தகவல் சொன்னது நான்தான்.

7. எனது மாமனாா் 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிா் வழக்குரையில் உயில் ஆவணம் பற்றி எதுவும் சொல்லவில்லை.

8. 2015ம் வருடம் உயில் எழுதியதாக சொன்ன காலத்தில் 1ம் பிரதிவாதிக்கு வயது 93 என்றால் சரிதான்.

9. பி.வா.சா.ஆ.2 ஆவணம் எனது மகள் அபிராமிக்கு தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்ததாக சொல்லும் ஆவணம் 2015ல் ஏற்பட்டது தான் என்றால் சரிதான்.

10. பி.வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்கள் ஏற்பட்ட காலங்களில் 1ம் பிரதிவாதி உடல் நலம் மற்றும் மனநலம் சரியில்லாமல் இருந்தார் என்றால் சரிதான். அவ்வாறு 1ம் பிரதிவாதி உடல்நலம் மற்றும் மனநலம் சரியில்லாத காலத்தில் பி.வா.சா.ஆ.1 மற்றும 2 ஆவணங்களை நான் ஏற்படுத்திக்கொண்டேன் என்றாலும், அந்த ஆவணங்கள் பற்றி 1ம் பிரதிவாதிக்கு தெரியாது என்றாலும் சரியல்ல.

மு.மா.நீ,

11. அதனால் பி.வா.சா.ஆ.1 மற்றும 2 ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றாலும், அதனால் அந்த ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு சொத்துக்களில் நான் எந்த உரிமையும் கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல.

12. என் கணவர் மற்றும் எனது மாமனார் ஒரே குடும்பமாக வசித்து, ஒரே சாப்பாடாக சாப்பிட்டு வந்தார்கள் என்றால் சரிதான்.

13. என் கணவர் இறந்த பின்னரும், என் மாமனார் என்னுடன்தான் இருந்தார் என்றால் நான்தான் பார்த்துக்கொண்டேன்.

14. வழக்கு 1வது அயிட்ட சொத்துக்களைப்பொறுத்து பாகப்பிரிவினை ஏதும் ஏற்படவில்லை என்றால் சரிதான்.

15. பி.வா.சா.ஆ.2 ஆவணம் ஏற்பட்ட இரண்டு மாத காலத்திற்குள்ளாகவே எனது மகளிடமிருந்து எனது பெயருக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொண்டேன் என்றால் சரிதான். அவ்வாறு குறுகிய காலத்திற்குள் பி.வா.சா.ஆ.3 ஆவணம் ஏற்படுத்திக்கொண்டதற்கான குறிப்பிட்ட காரணம் எதுவும் இல்லை.

16. பி.வா.சா.ஆ.5 மற்றும் 6 கிரையப்பத்திரங்கள் ஏற்பட்ட காலத்திலும் எனது மாமனார் 1ம் பிரதிவாதி உடல்நலம் மற்றும் மனநலம் சரியில்லாமல் இருந்தார் என்றால் சரிதான்.

17. பி.வா.சா.ஆ.5 மற்றும் 6 ஆவணங்களை நான் ஏற்படுத்தி அபலாபம் அடைந்துகொண்டேன் என்றாலும், அந்த ஆவணங்கள் பற்றி 1ம் பிரதிவாதிக்கு தெரியாது என்றாலும் சரியல்ல.

18. 5ம் பிரதிவாதி நாச்சாள் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்தது அவரது விருப்பத்தின் பேரில்தான் தாக்கல் செய்தார் என்றாலும், வாதியின் தூண்டுதலின் பேரில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. இருவரும் சேர்ந்துதான் வழக்கு தாக்கல் செய்தார்கள்.

19. எனது கணவர் பார்த்தசாரதி பெயரில் உள்ள வருவாய் ஆவணம் பி.வா.சா.ஆ.8 குடும்பத்தின் கர்த்தா என்ற பெயரில் ஏற்பட்ட ஆவணம் என்றாலும், அதனால் அவருடைய தனிப்பட்ட சொத்து அல்ல என்று சொன்னால் சரியல்ல.

20. பி.வா.சா.ஆ.9 மற்றும் 10 ஆவணங்கள் வழக்கு சொத்துக்களில் 5ம் பிரதிவாதியின் பாக உரிமையை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல.

21. குடும்ப சொத்துக்கள் அனைத்தையும் நானே அடைந்து அனுபவிக்க வேண்டும் என்ற பேராசையில், ஆவணங்கள் அனைத்தும் நானே உற்பத்தி செய்து, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வாய்தா வழங்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.